# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௪௫ | திருவள்ளுவர் யாண்டு ௨௰௰௩ விரோதிகிருது, மாசி (1972 — பிப்ரவரி — மார்ச்சு) | மலர் ௰௧ |


(சென்ற இதழின் தொடர்ச்சி)

## ஏலாதி - திறனாய்வு

புலவர். தி. நா. அறிவுஒளி,
திருக்கழுக்குன்றம்.

தமிழக அறவோர் அறம் கூறுங்கால் இருவகை நிலையில் அறமுரைப்பர். 1. தனக்குத்தானே மேற்கொண்டு ஒழுகும் அறங்கள். 2. தான் பிறர்பாற் கொண்டு ஒழுகத் தக்க அறங்கள்.

உலக அற இலக்கணமே இவ்விரு வகைக்குள் அடங்கி விடுகின்றது இவ்விரு துறையறிவுரைகளையும் கணிமேதையார் இப்பாவில் நல்குகிறார்.

"தாயற்ற பிள்ளைகள், கணவனையிழந்த கைம்பெண்டிர், ஊமைகள், வாய்ப்பிழந்த வாழ்வினர், வாணிகத்தில் இழப்பை எய்தி வறுமையுற்றவர், குருடர் ஆகியவர்களுக்குத் தாம் சேர்த்து வைத்துள்ள செல்வத்தைக் கரவாமல் அளிக்க வேண்டும்" எனக் குமுகாய அறிவுரை நல்குகிறார்,

"தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம் — போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணில் அவர்க்கீய்ந்தார்
வைத்து வழங்கிவாழ் வார்,' (ஏலாதி: 78)

கைம்பெண்களையும், வாணிகத்தில் இழப்புற்ற வணிகரையும் கருத்தோடு கருதி, அவர்களுக்கு உதவ வேண்டுமெனக் கணிமேதையார் குறித்தமை பெரிதும் பாராட்டற்பாலதாகும்.

கணிமேதாவியார் கல்வியின் இன்றியமையாமையை மிக மிக அழுத்தமாக வற்புறுத்தினர். குறிப்பாகப் பெண் கல்வியை விரும்பி வற்புறுத்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“இடைவனப்புந் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும் — புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு, (ஏலாதி: 74)

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு” என்ற குறளின் மரபில் மலர்ந்தது இப் பாட்டு. இதனோடு,

“குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுநிலையால் மாந்தர்க்குக்
கல்வி யழகே அழகு!”

என்ற பாட்டினையும் ஒப்பிட்டு ஓதுதல் இனிது. கல்விக்குச் செய்யும் செலவு சீரியது எனவும், அக்கல்விக்குச் செலவிடும் வள்ளல்களே நலன் எய்துவர் என்றும் கூறுகிறார்

பிழைகள் :

“பண்போல் கிளவியார்ப் பற்றுமை; பண்போலும்
சொல்லார்க் கருமறை சோராமை”

வேண்டும் என்னும் கருத்தைப் பதினைந்தாம் பாவில் கூறுகிறார். இக்கருத்து பிற்போக்கானது உரையாசிரியர்களும் பிற்போக்குக் கருத்தையே உரைத்துள்ளனர்.

பெண்டிரைத் தூற்றும் இயக்கம் தமிழகத்தில் காளாம்பியெனத் தோன்றிப் பரவியபோது தோன்றிய இடைச்செருகல் கருத்தே இது தமிழகப் பண்புக்கு மாறான இனைய கருத்துகள் கண்டித்தற்குரியவையாகும். மகளிர்க்கு ஆடவரோடு ஒத்த தகுதியுண்டென்பதே உண்மை. இதற்கு மாறான கருத்துக்கள் நலனுக்கு எதிரானவை என ஒதுக்குதல் வேண்டும்.

இக்கால மக்கள் மனப்பான்மை போல ஒரு பாட்டை இயற்றியுள்ளார்: “பிறர் பொருளைக் கவருதலும் சினத்தலும், தீக் காட்சியைக் காணலும் ஆகியவைகளைக் குறைக்க என்னும் முதியோர் மொழியை ஆய்ந்தறிந்த ஒருவன் அந்த ஆகா நடத்தை

களை அறிந்தே செய்தால், வேறொரு நல்ல காரணத்திற்காகவே அத்தீமைகளைச் செய்கிறான் எனக் கொள்க" என்கிறார். இப் பாட்டு ஆராய்வதற்குரியது என்பதோடு அமைகிறேன்.

"அஃகுநீ செய்யல் என அறிந்து ஆராய்ந்தும்
வெஃகல் வெகுளலே தீக்காட்சி — வெஃகுமான்
கள்ளத்த வல்ல கருதின் இவை மூன்றும்
உள்ளத்த ஆக உரை" (ஏலாதி: 27)

இசைக்கலை, நாடகக் கலைகளைக் கணிமேதாவியார் பழிக்கிறார். இதுவும் நம் நெஞ்சை வருத்துகிறது கலைகளால் விளையும் பயன்களும் உளவென உணர்தல் இன்றியமையாததன்றோ?

† ஏலாதியார் காலத்தில் அரங்கமும் ஒப்பனை முறைகளும் இருந்தன என இவர் பாடலால் அறிய முடிகிறது.

கலைஞர்களைப் பரத்தமை புரிவோராக ஆக்கும் சூழ்நிலை என்றும் எங்கும் இருந்து வருகிறது இதற்குக் கலையோ, கலையுணர்வோ குற்றவாளியாக ஆக வியலுமா என்று புரியவில்லை.

கலை தூயது; தெள்ளியது. கலையை ஆக்குபவர் ஏனைய மக்களைப் போல் குற்றம் செய்யக்கூடும். அதனால் கலையைப் பழிப்பது பொருந்தியதன்று

"பாடகம் சாராமை பாத்திலார் தாம் விழையும்
நாடகஞ் சாராமை நாடுங்கால் — நாடகம்
சேர்ந்தாற் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற் போற் தீரா வரும்." (ஏலாதி: 25)

பாத்திலார் என்போர் விலை மகளிர். பொது மகளிர் இசையரங்கும், நாடகமும் இயற்றி வாழ்ந்தமை இடைக்காலத்தில் தான். கழகக்கால நூற்களில் பொது மகளிர் இசையும் கூத்தும் வளர்த்தனர் எனக் குறிக்கப்படாமை கருதத்தக்கது. சிலப்பதிகார — மணிமேகலை காலத்திலிருந்து கலைத் துறைக்கும் கற்பழிவார்க்கும் உறவு வலிமை பெற்றது போலும்!

---

† பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவி னிரப்பிவை தாழா — அணியின்
அரங்கின்மேல் ஆடுநர்போல் ஆகாமல் நன்றும்
நிரம்புமேல் வீட்டு நெறி. (ஏலாதி: 24)

நாடகம், பாடகம் ஆகிய இடங்களை அணுகினால் பகை பழி, தீச்சொல், சாவு வரும் எனத் திட்ட வட்டமாகப் புலவர் வற்புறுத்தி அச்சுறுத்துகிறார். மாந்தர் தவறைக் கலைக்கு ஏற்றுவது நேரியதன்று. நாடகம், இசையால் இன்னலே வருவதாயிருப்பின் உலகில் இத்துணைக்காலம் அவை மக்களால் போற்றி வளர்க்கப்பட்டிராது புலவர். ஒழுக்கங் கெட்டோர்பால் 'கலை' சிக்கியிருப்பதைச் சாடினால் அது வரவேற்கத்தக்கதாம். ஒழுக்கங்கெட்ட கலைஞரால் பல துன்பங்கள் விளைவதை யாவரும் அறிவர். இந்த உண்மையைப் புலப்படுத்துவது கணிமேதாவியாரின் குறிக்கோளாக இருக்குமாயின், அவரைப் பாராட்டலாம். ஆயின், கலையைத் தூற்றுவது — துறப்பது — வேண்டாததே.

கணிமேதாவியார் வடமொழிக் கருத்துகளுக்கு — வேண்டாதவைகளுக்கு இடமளித்துள்ளமை தமிழினத்தின் தீயூழ்தான் போலும்! வடவர் நெறிக்கு இடமளித்ததால் பழந்தமிழ்ச் சான்றோரின் அறிவுரைகளைப் புறக்கணிக்கிறார். காலத்திற் கொவ்வாத கருத்தைப் புறக்கணிப்பது இன்றியமையாததே. ஆயின், சீரிய கருத்துகளை மறுத்தலோ, களைதலோ, பிழைக் கருத்தைப் பரப்புதலோ அறியாமையே யன்றோ?

வடமொழிச் சொற்களை நூலில் ஆண்டுள்ளார் இந்தத் 'திணிப்பு' வேண்டாததே இத்தகு பிறமொழிச் சொல்லாட்சியின் செல்வாக்கு தமிழின் நல்லாக்கத்திற்குக் கேடு என அக்காலச் சான்றோர் அறியாதது வியப்பாகவே உள்ளது!

**தூதன் இலக்கணம்:** தூது, தூதர் பற்றி வள்ளுவர் கருத்துகள் காலத்தால் முற்பட்டவை, சிறந்தவை. அவரை அடியொற்றித் தூதன் இலக்கணத்தை ஆசிரியர் உரைக்கிறார்:

"மாண்டு அமைந்து ஆராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் — பூண்டமைந்த
காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்." (ஏலாதி: 26)

அன்புடைமை, ஆன்றகுடிப் பிறத்தல், வேந்தர் விரும்பும் பண்புடைமை, அன்பறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, நூலகருள் நூல் வல்லன் ஆதல், அறிவுடைமை, ஒளி விளக்கும் உருவம், ஆராய்ந்த கல்வி, தூய்மை, துணிவுடைமை, துணைமை, வாய்மை ஆகிய பண்பு நலன் வாய்ந்தவனே சீரிய தூதுவன் ஆவான்."

''தூதன் சொல்லவேண்டிய கருத்தைத் தொகச் சொல்லி, தூவாதவற்றை நீக்கி, நகும்படியும் சொல்லி, நன்மை பயக்கும் வழியில் தூதுரைக்க வேண்டும். நூல்களைத் தெளிவாகக் கற்றும், அக் கல்வியைப், பகைக்கஞ்சாது எடுத்துரைத்தும், தான் உரைக்கும் பொருள் பிறர் செவியேறி அறிவில் உறைக்கும் வண்ணம் உரைத்தும் தூதன் தூதுவினை யாற்ற வேண்டும்.''

''தான் கூறும் தூறால் துன்பம் வரினும், அதற்கு அஞ்சாதும், வாய் சோராமலும் ஆண்மையோடு தூதுரைக்க வேண்டும்''—எனவெல்லாம் விரிவாகக் குறள், தூதன்—தூது—இலக்கணத்தை நவில்கிறது. இவற்றின் பிழிவாக ஏலாதிப் பாடல் உள்ளது.

சொல்லாட்சி: அன்னணம்: இன்று 'இன்னணம்' என முடங்கலில் கையெழுத்திடுதற்கு முன் எழுதும் சொல் போன்றது. அகரச் சுட்டினடிப் பிறந்தது 'அவ்வாறு' எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. †

அலைக்களம்: துன்பந்தரும் சிறைக் கூடத்தினைக் குறிக்கிறது. அலைத்தல், அலமருதல் என்பன துன்பஞ் செய்தல், துன்புறுதல் என்னும் பொருள் பயப்பன. சிறைக் கூடங்களில் குற்றவாளிகளுக்கு அக்காலத்தில் கொடிய ஒறுப்பு வழங்கியமையை இச் சொல்லாட்சி சுட்டுகிறது.

வார்குத்து: வெள்ளத்தில் சுழல் உள்ள இடத்தைக் குறிக்க இச் சொல்லாட்சி ஆளப்பட்டுள்ளது. இதற்குக் குத்துப்போர் (மற்போர்) செய்யுமிடம் எனவும் பொருள் காணலாம்.

சாரிகை $: ஓட்டம் பயிலுதற்கு இச்சொல் வழங்குகிறது. சுற்றி ஓடி வருதல் சாரிகை வருதல். யானை, குதிரை, தேர் ஆகியவற்றை மறவர் குறித்த களத்தில் போட்டி உணர்வோடு

---

† ''கற்றுரைக் கற்றதுணா ராரென மதியார்
உற்றுரை அன்னணம் ஓராமல் அற்றூர்கட்கு
உண்டி உறையுள் உடுக்கை இவைஈந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.'' (ஏலாதி: 9)

$ ''கொலைக்களம் வார்குத்துச் சூதாடு மெல்லை
அலைக்களம் போர்யானை யாக்கு — நிலைக்களம்
முச்சாரிகை ஒதுங்கும் ஓர் இடத்தும் இன்னவை
நச்சாமை நோக்காமை நன்று.'' (ஏலாதி: 12)

விரைந்தோட்டி வருதல் வழக்கம். கிரேக்க நாடுகளிலும் இத்தகு விளையாட்டுப் போட்டிகள் நிகழ்ந்தமையை வரலாறு உணர்த்தும். போர் யானையைப் பழக்குமிடமும் பண்டைக் காலத்தில் இருந்தது. அந்த இடம் திட்பமாகவும் உறுதியாகவும் விளங்கியது என்பதை 'நிலைக்களம்' என்ற சொல்லாட்சி நிலை நாட்டுகிறது.

**காயாமை :** ‡ இச்சொல் 'சினவாமலிருத்தல்' அல்லது 'வெறுக்காமல் இருத்தல்' என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. "காய்தல் உவத்தல் அகற்றி ஆய்தல் அறிவு" என்ற அறநெறிச் சாரப் பாடற்பகுதி எண்ணத்தக்கது. காய்தல் எனின் வெறுத்தல்—புறக்கணித்தல் எனப் பொருளாகும். இதற்கு எதிர் மறையே 'காயாமை.' கண்போன்ற இனிய உறவினரை, நண்பரைப், பெண்டிரை, குழந்தைகளை வெறுக்கவோ, சினக்கவோ, புறக்கணிக்கவோ கூடாது." என்ற அறிவுரையை அச்சொல்லாட்சி தருகிறது.

**வையான் ≠:** வைதல் என்றால் ஏசுதல், தூற்றுதல் என்று பொருளாகும். வையான் எனின் 'ஏசாதவன்' 'திட்டாதவன்' எனப் பொருளாகும்.

**இறந்தார் :** இச்சொல் நல்ல பொருளில் கணிமேதையாரால் ஆளப்பட்டுள்ளது. செத்தவர், கடந்தவர், பிரிந்தவர் என்ற பொருள்களில் இச்சொல் மிகுந்த அளவில் வழங்குவதுண்டு. ஆயின், கணிமேதையார் "**கல்வியிற் பெரியவர்**" என்னும் பொருளில் 'இறந்தார்' என்னும் சொல்லை ஆண்டுள்ளமை கூர்ந்து

---

‡ "கண் போல்வார்க் காயாமை கற்றார் இனம்சேர்தல்
பண்போல் கிளவியார்ப் பற்றாமை — பண்போலும்
சொல்லார்க்கு அருமறை சோராமை சிறிதெனினும்
இல்லார்க்கு இடர்தீர்த்தல் நன்று." (ஏலாதி: 15)

≠ "பொய்யான் புலாலொடு கள்போக்கித் தீயன
செய்யான் சிறியார் இனஞ்சேரான் — வையான்
கயல்இயல் உண்கண்ணாய்! கருதுங்கால் என்றும்
அயல அயலவா நூல் (ஏலாதி: 14)

ரைத்தக்கதாம். 'அறியாமையைக் கடந்தவர்' என்னுங் குறிப்பால் இச்சொல்லாட்சி பெய்துள்ளார் போலும்! *

**மறுதலை** * 'தீமை செய்த பகைவர்' என்ற பொருளில் இச்சொல் வழங்குகிறது. ஆங்கிலத்தில் Accused என்ற சொல்லுக்கு நிகரான பொருள் தரும் சொல். சட்டத்துறைச் சொல்லாட்சியாக ஏற்றற்குரியதாகும்.

**கூடம்**: P 'கரவு' என்னும் பொருளில் இச்சொல் பேச்சு வழக்கில் இதே பொருளில் வழங்குகிறது. "கூடமாகப் பேசுகிறான்" "ஏடா கூடம்" என்னும் சொற்றொடர்கள் கருதத்தக்கவை. ஏடா கூடம் என்ற பொருளில் 'ஏறு மாறாக'ப் பேசுகிறான் என்ற தொடரும் வழங்குகிறது.

**வாய்காப்பு** §: 'வாயிலைக் காப்பது' என்ற பொருளில் பயில்கிறது.

**சாயல்**: பண்டை இலக்கியங்களில் 'மென்மை' என்னும் பொருளில் பயிலும் சொல் இது. ஆயின், கணிமேதையார் 'மேன்மையான சொற்கள்' என்னும் பொருளில் ஆண்டுள்ளார். இவ்வாட்சி வியக்கத்தக்கது. தமிழில் உள்ள எழிலார்ந்த சொற்களில் 'சாயல்' என்பதும் ஒன்று. உணர்வள்ளும் பொருளாழ மிக்க இச்சொல் இன்று முற்றும் வேறு பொருளில் பயில்கிறது. இச் சொல்லை,

---

★ "துறந்தார்க்கண் துன்னித் துறவார்க்கு இடுதல்
இறந்தார்க்கு இனிய இசைத்தல் — இறந்தார்
மறுதலை சுற்றம் மதித்து ஓம்புவானேல்
இறுதலில் வாழ்வே இனிது" (ஏலாதி: 16)

P "குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பு மாற்றல் உடைமை — முடியோம்பி
நாற்றம் சுவைகேள்வி நல்லார் இனம்சேர்தல்
தேற்றுனேல் தேறும் அமைச்சு." (ஏலாதி: 17)

§ "குணம் நோக்கான் சூழ் நோக்கான் கோலமும் நோக்கான்
மணம் நோக்கான் மங்கலமும் நோக்கான்-கணம் நோக்கான்
கால்காப்பு வேண்டான் பெரியார் நூல் காலற்கு
வாய்காப்புக் கோடல் வனப்பு." (ஏலாதி: 23)

"மையேர் தடங்கண் மயில்அன்னாய்! சாயலே
மெய்யே உணர்ந்தார் மிகஉரைப்பர் — பொய்யே
குறளை கடுஞ்சொல் பயனில் சொல் நான்கும்
மறலையின் வாயினவர மற்று" (ஏலாதி: 28)

இப்பாடலில் பயிலும் 'மறலை' என்னுஞ் சொல் 'சிற்றறிவினன்' என்னும் பொருளில் பயில்வதாகும். இதனை மீண்டும் வழக்கிற்குக் கொண்டு வரலாம்!

வரலாறு: "புள்ளுறு புன்கண் தீர்த்த செம்பியன்" எனக் குறிப்பிடப்பெறும் பழங்காலச் சோழன் வரலாறு தமிழிலக்கியங்களில் பல விடத்தும் குறிக்கப்பெறும். இவனைச் 'சிபி' எனக் கூறி வட நூல்களுன்னும் குறிப்பர். மன்னுயிர்த் துன்பந் தீர்க்கத் தன்னுயிர் தரவும் முயன்றான் அம் மன்னன். தன்னுடல் உறுப்பை அறுத்துத் தரவும் அஞ்சாதவனை யார் தாம் பாராட்டப் பின் வாங்குவர்?

"மின்னேர் இடையார் சொல்தேறான் விழைவு ஓரான்
கொன்னே வெகுளான் கொலைபுரியான் — பொன்னே
உறுப்பு அறுத்தன்ன கொடை உவப்பான் தன்னின்
வெறுப்பு அறுத்தான் விண்ணகத்தும் இல் (ஏலாதி: 20)

சிலப்பதிகார ஆசிரியரும உடம் பரிந்து கொடுத்த ஈகையைப் போற்றுவர்;

"புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யாரம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவைமுறை செய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை
(சிலம்பு: வாழ்த்துக் காதை)

பெண்வழிச் சேறல் குற்றத்தைக் கடியும் ஆசிரியர் கூற்று போற்றற்பாலதாகும்.

உவமை; மயிலிறகின் அடிப்பகுதி வெண்மையாகவும் கூராகவும் இருக்கும் அது போன்றது அழகிய பெண்ணின் பற்கள் எனப் புலமைச் சுவை மிக வண்ணனை செய்கிறார். துறவு போற்றும் புலவராயினும் பெண்ணழகின் நுண்ணெழிலைச் சுவைத்தின்புறுது இரார் என்பதை இனைய நுண்ணிய அழகு

(336 ஆம் பக்கம் பார்க்க)

# கிரானைட்டுப் பாறைகளின் தோற்ற வெப்பநிலை

திருவாளர்கள். இரா, இராமசாமி ; மே. கி. இலக்குமி நாராயணன்
ஆய்வு மாணாக்கர், புவியியல் துறை.
மாநிலக் கல்லூரி, சென்னை.

பெருமளவில் பெல்சுபார், குவார்ட்சு சிறிதளவு மைக்கா, சிற்சில சமயங்களில் ஆர்ன்பிளண்டு ஆகிய கனிமங்களின் படிகத் தன்மையுடைய பரல்களை ( grains ) கொண்டு தோன்று கிறது கிரானைட்டு. கிரானைட்டும், கிரானைட்டை ஒத்த பாறை களும் எப்படித் தோன்றினவென்பது புதிராக இருப்பினும் அவை எந்த வெப்பநிலையில் தோன்றியுள்ளன என்பதை ஒரு வாறு தீர்மானிக்கலாம்.

நேரடியாக அளக்கும்போது கிரானைட்டைச் சார்ந்த எரி மலைக் குழம்புகளின் வெப்பநிலை 600° செ. லிருந்து 1200° செ வரை வேறுபடுகின்றது. மற்றும் 600° செ. வெப்பநிலைக்குக் கீழே குளிரும்போது அக்குழம்புகளின் பாகுத் தன்மை குறைந்து கெட்டியாக, அவற்றின் ஓடும் தன்மை நீங்கி விடுகின்றது. எனவே கிரானைட்டைச் சார்ந்த எரிமலைப் பாறைகளான இரையோலைட்டு, தாசைட்டு ( Dacite ) போன்றவை 600° செ. லிருந்து 1200° செ. வெப்பநிலைக்குள் நிலப்பரப்பில் தோன்று கின்றன என்று கூறலாம்.

இயற்கையில் ஒன்றிற்கு மேற்பட்ட பல கனிமங்கள் குறிப் பிட்ட அழுத்த நிலையில் ஒரு வேதியில் சம நிலையுடன் தோன் றும்போது பாறையின் உருகு நிலையும், கனிமங்கள் படிகமாகும் வெப்பநிலையும் குறைந்து விடுகின்றது. எனவே வேதியல் சம நிலையுடன் தோன்றும் கிரானைட்டுப் பாறை அதன் கனி மங்களின் உருகுநிலை அல்லது படிகமாகும் வெப்பநிலையை விடக் குறைவாக இருக்கும். குவார்ட்சு 1450° செ. வெப்ப நிலையிலும் ஆல்பைட்டு 1130° செ. யிலும் ஆர்த்தோகிளேசு 1180° செ. யிலும் படிகமாகத் தோன்றுகின்றன. இவை மூன்றும் ஓர் சம நிலையை உண்டாக்கும் போது 937° செ. வெப்பநிலை யில் தோன்றுகின்றன. எனவே இப்பாறையில் கிடைக்கும் ஆல்பைட்டைக் கொண்டு இஃது 1130° செ. க்கும் கீழான வெப்பநிலையில் தோன்றியுள்ளது என்று கூறலாம்.

பலவேறு வெப்ப நிலையில் குவார்ட்சு பலவேறு கனிமங்களாக மாறுகின்றது. மிகவும் குறைந்த வெப்பநிலையில் தோன்றும் ஆல்பா குவார்ட்சு 573° செ. வெப்பநிலையில் பீட்டாக்குவார்ட்சாக மாறுகிறது. பீட்டாக் குவார்ட்சு 930° செ. இல் திரிடைமைட்டாகவும் 1430° செ. இல் கிரிஸ்டோபலைட்டாகவும் மாறுகின்றது. பொதுவாகக் கிரிஸ்டோபலைட்டும் திரிடைமைட்டும் கிரானைட்டுப் பாறைகளில் கிடைப்பதில்லை. ஆல்பா குவார்ட்சு 573° செ இல் பீட்டாக் குவார்ட்சாக மாறுகிறதென்றாலும் இம்மாற்றத்தின் வெப்பநிலை அழுத்தத்தால் மிகுதியும் வேறுபடுகின்றது. நிலப்பரப்பிலிருந்து கீழே செல்லச் செல்ல, மேலேயுள்ள பாறைகளின் அழுத்தத்தால் ஒரு

---

( 334 ஆம் பக்கத் தொடர்ச்சி )
வண்ணனைகளால் அறிகிறோம்! அழகின் ஆற்றல் அறிவையும் ஈர்த்து அடிமையாக்குவதன்றோ!

பொதுத் திறனாய்வு: வெண்பாயாப்பமைப்பில் நனி சிறந்த ஆற்றல் இந்நூற்பாக்களில் அமையவில்லை. கருத்துகளை முறைப்படுத்தியளிக்க ஆசிரியர் முற்படவில்லை. இரவல் கருத்துகளே மிகுதி. உவமை, அணிநலங்களில் புதுமை கவர்ச்சி எதுவுமில்லை. பிற அற நூல்களோடு ஒப்பிடுங்கால் ஏலாதிக்கு உயரிய இடமிருக்க வழியில்லை. புகைந்த அடுப்பில் அரை குறையாக வேக வைத்த சோறு ஏனோ நினைவில் தோன்றுகிறது.

முடிவுரை: மக்கள் மனவியலை ஆராய்ந்து அறங் கூறும் முயற்சியில் புலவோர் பிற்காலத்தில் எண்ணத்தைச் செலுத்தவில்லை. முன்னே சொன்னவற்றையே பன்னிப் பன்னி கூறுவதில் ஈடுபட்டனர். அதனைத் தவிர, பிறமொழிக் கருத்தை மொழிபெயர்க்க முற்பட்டனர். இவ்விரு முயற்சியினும் அறிவியலில் பெருந்தொண்டாற்ற இயலும் என அவர்கள் கருதாமை வியப்பே. இன்றும் இலக்கியத் துறையில் 'அறநூல்' துறையில் செவ்விய பணி ஆற்றப்படாமையை வருத்தத்தோடு குறிப்பிட்டேயாக வேண்டும். அறத்தின்பால் மக்கள் நம்பிக்கை குன்றி வருகிறதா? அவ்வாறானால் அதன் அடிப்படை யாது? அறத்தின் வீழ்ச்சி, மரபை — குமுகாயத்தை எவ்வாறு தாக்கும்? இந்நிலையை மாற்றத்தக்க முறை—தொண்டு—யாது? 'உலக அற ஒழுக்கம்' எவ்வாறு உருவாக வேண்டும்? என்பன போன்ற வகையில் சான்றோர் ஆய்வு வளர வேண்டும். இதனை எண்ணுவோர் யார்?

காற்று மண்டல அழுத்தத்திற்கு 0215° செ. வீதம் இம் மாற்ற வெப்பநிலை 573° செ. லிருந்து உயர்ந்து செல்லுகிறது ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் ஆழத்தில் 800° செ. வெப்பநிலையில் தான் ஆல்பா குவார்ட்சு பீட்டாக் குவார்ட்சாக மாறுகிறது. எனவே மிக ஆழமான இடங்களில் தோன்றியுள்ள கிரானைட்டுப் பாறைகளின் தோற்ற வெப்ப நிலையைக் கணிக்கும் போது இத் திருப்பத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். இதற்காக வெப்ப இயங்கியல் விதிகள் கடைப்பிடிக்க வேண்டும். இன்றைக்கு நிலப்பரப்பில் கிடைக்கும் கிரானைட்டுப் பாறைகளில் பெரும்பாலானவை பல கோடி ஆண்டுகளாக ஏற்பட்ட நில அரிப்பின் விளைவாக வெளித் தெரிவனவாகும்.

பெக்மடைட்டுப் பாறைகள் கனிமப் பொருட்களைத் தோற்றுவிக்கும் வாயுப் பொருட்களுடன் நீராவியையும் கொண்டிருப்பதால் அவை கிரானைட்டுப் பாறைகளைவிடக் குறைந்த வெப்ப நிலையில் தோன்றுவனவாகும். ''யார்ட்டு'' (1945) என்பவர் குறிப்பிட்ட அழுத்த நிலையில் தூய நீருடன் சேர்ந்த பளிங்குத் தன்மையுடைய (glassy) சிலிக்கா (குவார்ட்சு) 374° செ. வெப்பநிலையில் கிரிஸ்டோபலைட்டாக மாறுகிறது எனக் கண்டிருக்கிறார். ''வைல்'' என்பார் சிலிக்கா திரவ சோடியத்துடனிருக்கையில் 700° செ. வெப்பநிலையில் கிரிஸ்டோபலைட்டையும் 500° செ. வெப்பநிலையில் குவார்ட்சையும் தோற்றுவிப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

இவற்றிலிருந்து வாயுப் பொருட்களும், கரைந்துள்ள காரப் பொருட்களும், அழுத்த நிலையும், பிறவும் படிகமாகும் குவார்ட்சின் தோற்ற வெப்பநிலையைப் பாதிக்கின்றன என்று அறியலாம் இச் சூழ்நிலை மாற்றங்களால் குவார்ட்சில் குறிப்பிடத்தக்க படிக உருவ மாற்றங்கள் நிகழுகின்றன. குறைந்த வெப்ப நிலையில் தோன்றும் படிகங்கள் எளிய ஓரிரு படிக வடிவமைப்புகளை (Crystal forms) மட்டும் கொண்டுள்ளன. உயர்ந்த வெப்பநிலையில் தோன்றும் படிகங்கள் எண்ணிக்கையில் மிகுந்த பலவிதமான படிகவடிவமைப்புகளைக் கொண்டு அமைகின்றன குவார்ட்சைப் போலவே ஏனைய கனிமங்களும் தத்தம் இயல்பிற்கேற்றபடி அமைகின்றன.

ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்குள்ள பெல்சுபார்கள் கிரானைட்டுப் பாறைகளில் தோற்ற வெப்பநிலைக் காட்டிகளாக உள்ளன. வெப்பநிலைக்கேற்றபடி ஆல்பைட்டு, ஆர்த்தோ

கிளேசு அனார்த்தைட்டு ஆகிய கனிமங்களின் அணுத்திரள்கள் சேர்ந்து பெல்சுபாரைத் தோற்றுவிக்கின்றன. பெல்சுபாரில் சேர்ந்துள்ள ஆல்பைட்டு அனார்த்தைட்டு, ஆர்த்தோகிளேசு அணுத்திரள்களை வேதியல் பகுப்பின் மூலம் கண்டறிந்து ஆல்பைட்டு பொட்டாசியம் பெல்சுபாரில் எவ்வளவு சேர்ந்துள்ளது, பிளேசியோகிளேசில் அஃது எவ்வளவு அடங்கியுள்ளது போன்றவற்றைக் கணித்து, வரைபடங்களின் உதவியால் எவ்வாறு அதன் தோற்ற வெப்ப நிலையைக் கண்டு பிடிக்கலாம் என்பதை 'பார்த்து' (1962) என்பார் தெளிவாக விளக்கியுள்ளார். பெல்சுபார்களைக் கொண்டு கிரானைட்டு பாறைகளின் தோற்ற வெப்பநிலையை அளவிட்டதில், பெரும்பாலானவை 900° செ. கீழாகவே தோன்றியுள்ளனவாகக் காணப்படுகின்றன. இம்முறையில் வெப்ப இயங்கியல் விதிகளைப் பயன்படுத்திக் கனிப்பதால், ஒரு கிரானைட் பாறையின் உண்மையான தோற்ற வெப்பநிலையைத் துல்லியமாகக் கண்டுபிடிக்க இயலும்.

தோற்ற வெப்பநிலைக் கேற்றபடி பெல்சுபாரின் படிக உருவமைப்பும் மாறுபடுகின்றது இதனால் இத்தகைய பெல்சுபாரிகளின் ஒளிவிளைவு பண்புகள் (optical properties) மாறுபடுகின்றன. எனவே ஒளிவிளைவு பண்புகளைக் கொண்டும் அவற்றின் தோற்ற வெப்பநிலையைக் கூறமுடியும். இதன் மூலம் உயர்ந்த வெப்பநிலையைச் சார்ந்த பெல்சுபார்கள் குறைந்த வெப்பநிலையைச் சார்ந்த பெல்சுபார்கள் என இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. உயர்ந்த வெப்பநிலைப் பெல்சுபாரைச் சேர்ந்த சானிடின் பெரும்பாலும் எரிமலைப் பாறைகளில் கிடைக்கின்றது. குறைந்த வெப்பநிலையில் தோன்றும் அடுலேரியா கிரானைட்டுப் பாறைகளில் கிடைக்கின்றது. குவார்ட்சைப் போலவே குறைந்த வெப்பநிலையில் தோன்றும் பெல்சுபார்கள் எளிமையான படிக வடிவமைப்புகளைக் கொண்டுள்ளன. பொட்டாசியம் பெல்சுபாரில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு "இங்கர்சன்," (1955) இதனை விளக்குகிறார்.

பொட்டாசியம் பெல்சுபார்

800° சே. (001) (010) (110) பெரும்பாலானவை
'அ' அச்சுக்கு இணையாக உள்ளன

500° செ. (001) (010) (110) பெரும்பாலானவை
'இ' அச்சுக்கு இணையாக உள்ளன

550° செ. (110) பெரும்பாலனவை
பெரியனவாக ஏனையன சிறியனவாக உள்ளன

150° செ. (110) (101)

எனவே படிக உருவமைப்புகளைக் கொண்டும் ஒருவாறு வெப்பநிலையை அறிய முடியும். ஆயினும் படிகவடிவமைப்பு தோற்ற வெப்பநிலையை மட்டும் அல்லாது, கரைசலின் வேதிய லமைப்பு ஹைட்ரசன் அயனிச் செறிவு, வேற்றுப் பொருட்களின் சேர்க்கை, படிகங்கள் வளரும் வேகம், போன்ற இன்னோரன்ன பிறவற்றாலும் மாறுவதால் சிக்கல் மிகுதியாகிறது.

படிக வேதியல் சமநிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட பல கனிமங்கள் ஒரே சமயத்தில் தோன்றக் கட்டம் கட்டமான படிகப் பின்னலமைப்பு உருவாகிறது. இவ்வமைப்புக் காணப்படும் பெல்சுபார்கள் குறைந்த வெப்பநிலையில் தோன்றியவையாகும். இவ்விதமாக

| | | |
|---|---|---|
| ஆர்த்தோகிளேசு — ஆல்பைட்டுடு | | 1070° செ. |
| ஆர்த்தோகிளேசு — குவார்ட்சு | | 990° செ. |
| ஆர்த்தோகிளேசு — குவார்ட்சு — ஆல்பைட்டு | | 937° செ. |

வெப்ப நிலைகளில் வளருகின்றன. இதன் மூலம் உச்ச வெப்ப நிலையைத் தீர்மானிக்கலாம்.

கிரானைட்டுகளில் குறைந்த வெப்பநிலையில் தோன்றும் மைக்ரோகிளைன் மிகுதியாகக் காணப்படுகிறது, பொட்டாசியம் பெல்சுபாரினுள் படிகமாகும் சோடியம் பெல்சுபாரும் சோடியம் பெல்சுபாரினுள் படிகமாகும் பொட்டாசியம் பெல்சுபாரும் மற்றும் பெல்சுபார் போன்று படிகங்களினுள் படிகமாகும் பிற கனிமங்களும் (Exsolved minerals) தோற்ற வெப்பநிலையை உணர்த்தவல்லன. இப்பெல்சுபார்களின் தனித்தனி அளவினைக் கணக்கிட்டு இவ்வெப்பநிலையைக் கண்டுபிடிக்க இயலும். பெல்சுபார் படிகங்களில் ஏற்படும் காரந்தனிம ஏற்றம் (alkali-metasomatism) படிகமாகும் இறுதிக் கட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துக் காட்டுவதால் குறைந்த வெப்பநிலையைக் காட்டும்.

பெரும்பாலும் மஸ்கோவைட்டு மைக்கா பெக்மடைட்டிலும், பாறைக் குழம்பின் இறுதியில் நிலைப் படிவுகளிலும் தோன்றுகின்றனவாதலால் குறைந்த வெப்பநிலையைச் சார்ந்தனவாகக் கருதப்படுகிறது. வானிலைச் சிதைவினால் தோன்றும் மஸ்கோவைட்டு மிகவும் குறைந்த வெப்பநிலையில் தோன்றுவதாகும். மஸ்கோவைட்டு 600° செ. கீழாகப் படிகமாக வளருகிறது. பையோமைட்டு மைக்கா இன்னும் மிகுதியான வெப்பநிலையில்

தோன்றுகிறது. சில எரிமலைப் பாறைகளிலும் இது காணப் படுகிறது. நீர்ம உயர்வெப்பநிலைப் படிவுகளின் பாறைச் சுவர் களில் உள்ள பையோடைட்டின் வெப்பநிலை 300° செ. லிருந்து 500° செ. வரை வேறுபடுகின்றது. எனவே மஸ்கோவைட்டு, பையோடைட்டு என்ற இருவித மைக்காக்களும் ஒருமித்துக் கிடைக்கும் கிடைக்கும் கிரானைட்டுப் பாறைகள் 300° செ. லிருத்து 600° செ. இடையில் தோன்றலாம்.

மாக்னடைட்டிலுள்ள தைத்தானிய ஆக்சைடைக் ( $TiO_2$ ) கொண்டு "பட்டிங்டன்" (1955) என்பவர் பாறைத்தோற்ற வெப்பநிலைகளை வரையறுத்துள்ளார். ஆக்ஸி ஆர்ன்பிளண்டு கள், கார்டியரட்டு, குருந்தம், சில்லிமனைட்டு ஆகிய கனிமங் கள் உயர்ந்த வெப்பநிலையைக் காட்டுவனவாக உள்ளன. அயம் [3] , அலுமினியம், மக்னீசியம், மாங்கனீசு போன்ற கனி மங்கள் குறிப்பிட்ட கனிமங்களில் புகுவதைக் கொண்டும் தோற்ற வெப்ப நிலை அறியப்படுகிறது.

அல்லனைட்டு சிர்க்கான், மோனேசைட்டு போன்ற கனி மங்களின் கதிரியக்கப் படிகச் சிதைவு ( Metamictic nature ) 450° — 900° செ. வெப்ப நிலைக்குள் சீரடைகிறது. எந்த வெப்பநிலையில் இச்சிதைவு சீர்பெறுகிறதோ அந்த வெப்பநிலை, அக்கனிமத்தைக் கொண்ட பாறையின் தோற்ற வெப்பநிலை யாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஓரே தனிமத்தின் ஐசோடோப்புகள் தம்முள் ஓத்த வேதி யல் பண்புகளைக் கொண்டிருந்தாலும் அவற்றிடையே மிகச் சிறிய வேறுபாடுள்ளது. எடுத்துக் காட்டாக் $C^{12}O^{16}$, $6^{13}O^{16}$ ஆகிய அணுத்திரள்களுக்கிடையேயுள்ள வேற்றுமையைச் சுட்ட லாம். இச்சிறிய வேறுபாட்டைக் கொண்டும் கதிரியக்கத் தனி மங்களின் தோற்ற வெப்பநிலை கணிக்கப்படுகிறது. வெவ்வேறு கிரானைட்டுப் பாறைகளில் வேறு விதமான கூட்டுக் கனிமங்கள் ( Accessory minerals ) கிடைக்குமாதலால் அவற்றினின்றும் தோற்ற வெப்பநிலையை அறிய வேறு பல வழிகளும் உள்ளன.

உருமாற்றத்தால் தோன்றும் கிரானைட்டுகளும், தனிம மாற்றத்தால் ( Metasomatic ) தோன்றும் கிரானைட்டுகளும் தமது தோற்ற வெப்பநிலையை உணர்த்துகின்றன. பாறைத் தோற்ற வரலாற்றில் இறுதிக் கட்டத்தில் தோன்றும் மாற்றங் களே நிலை பெற்றிருப்பதால், அம்மாற்றங்கள் நிகழும் வெப்ப நிலையை அறியலாம்.

கிரானைட்டுப் பாறைகள் எப்படித் தோன்றின என்பது புதிராக இருப்பினும், இப்புதிர்களை விடுவிக்கப்பாறையின் தோற்ற வெப்பநிலை பெரிதும் துணைபுரிகிறது இவ்வெப்ப நிலையைக் கொண்டு பாறைத்தோற்ற வரலாற்றினை ஒருவாறு ஊகித்தறியலாம். இந்த அறிவு புவியியல் நிலவியக்க அசைவுகளையும், புவியியல் வரலாற்றினையும், பற்றி ஆராயக் கால் கோலுகிறது.

---

References :

1. T F. W. Barth, 1962, Feldspar Gealogic Thermo meters Norsk Gealogisk Tidsskrift, Bind 42, pp. 330 — 339.

2. A. F. Buddington. 1955, Thermomctric and Petrogenetie significance of Titaniferonr mannetive. Am. Jour. Sci. Vol 253, pp. 497 — 532,

3. E. Ingersen. 1955. Gealogic Thermometry, Crust of the Earth. Soc. Amer. Spec. Pap. No. 62.

4. E. Raguin. Geology of Granite, Wiley Interscience, P. 272, 1965.

5. J. Wyart, 1945; Action de L'eauet de solutions potassiques agissant sous pression sur les differentes froms de silice. C. R. Acad. Scienees, Paris, 226 P. 830,

# இடைச்சொல்லின் இயல்பு

செஞ்சொற் கொண்டல், புலவர்.
சொ. சிங்காரவேலன், M. A., Dip. Ling.,

1. 1. தமிழில் உள்ள சொற்களை நான்கு வகைப்படுத்திய தொல்காப்பியர். அப்பாகுபாட்டைப் பின்வரும் நூற்பாக்களில் கூறியுள்ளார் :

"சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண்டென்ப அறிந்திசி னோரே" (சொல் 158)

"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றுமென்ப" (சொல் 159)

'சொல்லாவன பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமென இரண்டென்று சொல்லுவர் அறிந்தோர்' என்றும், 'இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும்' என்றும் சேனாவரையர் இந்நூற்பாக்களுக்குப் பொருள் கூறினர். 'பிற சொல்லும் உளவாயினும் இவற்றது சிறப்பு நோக்கிப் 'பெயரே வினையென்றாயிரண்டென்ப என்றார்' என்பதனால் இடை, உரியைவிடப் பெயரும் வினையுமே சிறந்தன என்பது புலனாகும்; இவற்றுள்ளும் பொருளது புடை பெயர்ச்சியாகிய தொழில் பற்றாது அப்பொருள்பற்றிவரும் சிறப்புடைமை பெயர்க்கு உளது ஆதலின், அதுவே முற்கூறப்பட்டமைக்குரிய காரணம் ஆம் என்பது சேனாவரையர் கொள்கை. இடை உரி பற்றிய இரண்டாவது நூற்பாவில், 'சார்ந்து தோன்றும் எனவே அவற்றது சிறப்பின்மை பெறப்படும் என்ற சேனாவரையர் உரைப்பகுதி நோக்கத்தக்கது; உரிச் சொல்லுக்கு முன்னே இடைச்சொல் ஓதப்பட்டமை, வழக்குப் பயிற்சி நோக்கியே; சிறப்புடைமை கருதி அன்று என்பதும் இவ்வுரையாசிரியர் கருத்தாகும். இந்நான்கும் இரண்டு பகுதி உடையனவாகவே கருதத் தக்கன என்பது தொல்காப்பியர் கருத்து என்பது இரண்டு நூற்பாக்களாலே அவர் பிரித்து ஓதுவதனானும் உணரப்படும் வழி மருங்கு என்னும் இரண்டிடங்களை இடை உரிகட்கு அவர் கூறியுள்ளார்; ஆயினும், 'சார்ந்து' என்ற ஒரே சொல்லால் சேனாவரையர் அவற்றை விளக்கியுள்ளமை நுட்பமாக உணரத் தகுந்ததாக உள்ளது. 'வழி' என்பது 'பின்' என்ற பொருளையும், மருங்கு என்பது 'பக்கம்' என்ற பொருளையும் தருவன.

1. 2. இனி, இடைச் சொல்லின் இயல்பு இடையியலிற் கூறவந்த ஆசிரியர்,

"இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே" (சொல் 249)

என்று கூறினர். பெயரையும் வினையையும் சார்ந்து நடைபெறும் என்ருல், 'பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடையவல்ல' என்று கொள்ளல் வேண்டும் என்பது சேனுவரையர் கோட்பாடு, இவ்வாறே, உரிச்சொல் பற்றிய பொது விலக்கணமும் தனித்து ஓதப்பட்டது; இங்கு இடைச்சொல் பற்றி மட்டும் சிந்திப்பது நம் கடன் ஆகும். சார்ந்து வருவது உரிச்சொற்கும் ஒக்கும்; ஆதலின் தமக்கெனப் பொருள் இன்மை இடைச் சொற்குச் சிறப்பிலக்கணமாகக் கொள்ளத்தக்கது ஆம்.

1. 3. இடைச்சொற்கள் 'வழி'யிலும் 'மருங்கி'லும் வருதலுடன் உறுப்பாகவும் பெயர் வினைகளுடன் வருதல் உண்டு.

1. உண் + ட் + அன் + அன் > உண்டனன்
2. மக + அன் > மகன்

இக்காட்டுக்களில் உறுப்பாக வருதல் தெளியப்பெறும். உறுப்பாகவும் நின்று, பெயர் நடையையும், வினை நடையையும் இவை பெறுவன என்பதனை விளக்கவே, 'பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும்' என்ற சொற்களை ஆசிரியர் அமைத்துள்ளார்; 'வழி மருங்கில் தோன்றும் என்பதுடன் நிறுத்திருந்தாலோ, 'நடைபெற்றியலும்' என்பதுடன் நிறுத்திருந்தாலோ இலக்கணத்திற் குறைபாடு நேரும் ஆதலின் இரண்டையும் கூறிமுற்றுவித்த அமைப்புச் சிறப்பினை எண்ணி எண்ணி மகிழ்தல் வேண்டும்.

'இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறல்ல; 1 செய்யுளாறே' 2 (சொல் 18)

என்புழியும். தொல்காப்பியர் இத்தகு முறையையே மேற்கொண்டு சிறந்தமை காணலாம்; 'ஒன்றனது ஆற்றலான் ஒன்று பெறப் படுதலின், வழக்காறல்ல என்றுனும், செய்யுளாறென்றுனும் கூற அமையும் எனின், உய்த்துணர்வது சொல் இல்வழி என மறுக்க' என்ற அந்நூற்பாச் சேனுவரையர் உரை கருதத் தக்கவின் உடையது. அவ்வாறே இங்கும் பொருள்

தெளிவிற்காக ஆசிரியர் இலக்கண வரையறையை இனிது விளங்க ஓதியுள்ள திறம் உணர்தற்குரியது

2 1. இவ்வாறு சொல்லியல் முறையிற் பொருட் கூறுபாடு செய்து, பெயர்வினை இடைஉரி எனப் பகுத்த தொல்காப்பியர், சொற்பிறப்பியல் முறையிலும் சொற்களை நான்காக வகுத்து ஓதியுள்ளார் :

'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச்சொல்லே' (சொல்—397)

இவ்விரு வகைப் பாகுபாடும் நுட்பமாக மொழி ஆராய்ச்சி செய்து அழகுறப் பனுவல் புனைந்தருளிய தொல்காப்பியராற் செய்யப்படடுள்ளமையை எண்ணுந்தோறும் எண்ணுந்தொறும் மகிழ்ச்சி உள்ளத்திற் பெருகுகின்றது. நுட்பமாக உணரத்தக்க இப்பாகுபாட்டெளிமை,

'அதுவே
இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
என இரண்டாகும் இடையுரி யடுத்து
நான்குமாம்; திசைவடசொல் அணுகாவழி'
(நன்னூல் 270)

என்ற நன்னூற் சூத்திரத்தை நோக்கும்போது இடர்ப்படக் காண்கின்றோம். இரண்டையும் ஒன்றுபடுத்தியதன் வாயிலாக நூற்பாச் சுருங்கிற்றே தவிர, உணர்த்த வந்த செய்தி தெளிவுற உணர்த்தப் பட்டதாகக் கொள்ளப்பட இடம் இல்லை.

2. 2. இனி இப்பாகுபாட்டினை அடுத்து இடைச்சொல் என்றதன் பெயர்க்காரணம் சிந்திக்கத் தக்கதாக உள்ளது; 'பெயர்ச்சொல் வினைச்சொற்களும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடை நிகரனவாய் நிற்றலானும்' என்ற அந்நூற்பாவிற் கமைந்த சிவஞான முனிவர் உரை ஒரு காரணத்தை இயம்பு கின்றது; 'இடை நிகர்த்த தன்மை' உடைமையால் இடைச்சொல் ஆயிற்று என்பது முனிவர் கருத்து. இடையில் வருவன ஆதலின் இடைச் சொல் எனப்பட்டன என்று கோடல் பொருந்தாது; ஏனெனில் உறுப்பாக இடையிலும் வருவதனுல் என்பது தெளியப்படும். இடைச் சொற்களைத் தற்கால மொழியியலார் இரண்டாகப் பாகுபாடு செய்வர், Pasticles, clitics — என்பன இவர் வழங்கும் குறியீடுகள் சார்ந்து நின்று பொருள் உணர்த்தியும், தனித்து நின்று பொருள் உணர்ந்தியும் வருவன முன்னதிலும் இணைந்து நின்று பொருள் உணர்த்தித் தனித்து வராதெனப் பின்னதிலும் அடங்கும். முதற்கண் நிலை உடையன

Pro-clitics என்றும், அவற்றை அடுத்து நிலை உடையன Post - clitics என்றும். இரண்டற்கு இடைப்பட்டு இணைக்கும் நிலை உடையன Bound - clitics என்றும் வழங்கப்பெறும். ★

2. 3 'இடை' என்பது 'இடம்' என்ற பொருளைக் குறிப்பதாகக் கொண்டு, பெயரிடையும் (இடத்தும்) வருவன இடைச்சொல் என்று பொருள் கூறுவதும் உண்டு.

"இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே"
(சொல் 455)

என்ற நூற்பாவில் இடைச் சொல்லியல்பு பிறிதொன்றை ஆசிரியர் கூறுகின்றார். பிறிதோர் சொல்லை வேறுபடுப்பனவும், பிறிதோர் சொல்லால் வேறுபடுக்கப்படுவனவும் என இருவகைப்படும் சொல்லியல்புகளுள் இடைச் சொற்கள் என்பன பிறிதோர் சொல்லை வேறுபடுக்கும் சொற்கள், என்பது தெளிவு. 'விசேடித்தல்' என்று சேனாவரையர் அதற்கு விளக்கம் காண்பர்.

இடைச் சொற்கள் அனைத்துமே வேறுபடுத்தும் சொற்களாக இருப்ப, அவற்றுள் ஒரு சாரனவற்றை வேற்றுமைச் சொல் என்று ஆளுவது நயம்பற்றி என்பர் அவ்வுரையாசிரியர், இவை வேறுபடுக்குமே யன்றி வேறுபடுத்தப்படும் சொல் ஆகா என்பது இந் நூற்பாவின் உணர்த்தப்பட்ட நுண் பொருள் ஆகும்.

1) 'சிறியகட் பெறினே எமக்கீயும்மன்' (புறம் — 235)
2) 'பண்டு காடுமன்'

என்ற எடுத்துக் காட்டுக்களில், ஈயும் என்ற வினையைச் சார்ந்த 'மன்' என்ற இடைச் சொல் அது கழிந்தது என்ற பொருள் தந்து வேறுபடுத்திற்று; பண்டு காடு ஆக இருந்த ஒன்று இன்று வேறு ஆயிற்று என்ற ஆக்கம் குறித்து, வேறுபடுத்திற்று. இவ்வாறே பிற இடைச் சொற்களும் வேறுபடுத்தும் சொற்களாதல் தெளியப்படும்.

---

★ "Pasticles are those which cannot take either case suffixes or tense suffixes but they can occur Independeutly or with nown or verb as modifiers."

"Clitics are those which are always bound and they can take another clitic."

— See. P. 216 and 227. — "The language of Tamil Inscriptions" — Dr. S. Agasthyalingam & Dr. S. V. Shanmugam-Annamalai University 1970.

2. 4. இடைச் சொல்லின் இயல்பைப் பொது விலக்கணத்தால் குறித்த தொல்காப்பியர், அதன் பாகுபாட்டை உரைத்துப் பின் சிறப்பிலக்கணம் கூறியுள்ளார், 'அவ்வச் சொற்கு அவையவை பொருள் என மெய்பெறக்' கிளந்து உரைத்தார்; (சூ. 295) வினையினும் பெயரினும் அவை ஓரோவழித் திரிந்து வேறுபட்டாலும் ஆராய்ந்து கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். இடைச் சொற்கள் கூறிய முறையான் வருவதே பெரும்பான்மை என்பதும், வேறுபட வருதல் சிறு பான்மை என்பதும், அறியத் தருந்தன.

'கிளந்தவல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே'
(சொல். 296)

என்று புறனடையும் கூறியுள்ளார். எடுத்து ஓதாத இடைச் சொற்களை யெல்லாம் தழுவிக் கொள்ளுதற்கே இப்புறனடை அமைந்துள்ளது.

3. 4. இடைச் சொற்கள் இல்லாவிடில் மொழி உணர்ச்சியற்றதாகப் போய்விடும் மொழியின் உணர்ச்சி நிலைகளை எடுத்துரைப்பன இடைச் சொற்களே ஆம்; ஆதலின் சொற்களை விட்டிசைக்கச் செய்யாமல் ஒற்றுமைப்படுத்துவனவும், பல்வேறு பொருட் குறிப்புக்களை வெளிப்படுத்துவனவும். உயர்வு, இழிவு, வெறுப்பு, மகிழ்ச்சி முதலிய மனித உள்ளங்களின் பல்வேறு உணர்ச்சி நிலைகளை வெளிப்படுத்துவனவும் ஆகிய இடைச் சொற்கள் மொழியியல் ஆய்விற்குப் பெருந்துணை புரிவன என்று கூறலாம். பெயரும் வினையும் பற்றி அறிதற்கும் இடைச் சொல் துணை நிற்றல் தெளிவு. வெறுஞ் சொற்கள் (empty morphem-s) என்று கூறுமல் இணைக்கும் சொற்கள் (Link morphemes) என்றும் ஒரு சார் இடைச் சொற்களைக் குறிக்கும் வழக்கமும் உள்ளது.

சுருங்கக் கூறினல் இடைச் சொற்களை ஆராய்வது என்பது மொழியின் மிக நுட்பமாக உள்ள சில பகுதிகளை ஆராயும் செயலாக உள்ளது என்று கூறலாம். ஓர் ஆசிரியனின் இடைச் சொற்கள் இன்னும் ஆழ்ந்து நோக்க, அவனது உளப்பாங்கின் பல நிலைகளைக் கூடக் காண இடம் உண்டு; ஆதலின் உளவியல் துறை அடிப்படையான இலக்கியப் பார்வைக்கும் கூட இந்த நோக்குடைய சிந்தனை துணை நிற்றல் தெளிவு.

# பொருத்தத்தில் பொலிந்த பொருளாழம்

திரு. இர குழந்தைவேலு, எம். ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர், பூ. சா. கோ. கலைக் கல்லூரி,
கோவை - 14.

## 1

கம்பர் தம் இயற்கைப் புலமையும் இலக்கியக் கலைப் புலமையும் கலந்து விளைத்த நலத்தில் முதிர்ந்து பழுத்த செவிநுகர் செழுங்கனி இராமாயணம். நெடுங்காப்பியமாக வரைந்த கம்பருக்குக் கல்வியிற் பெரியவர் என்னும் புகழ் வளர்த்த பெரும் பெயர்க் காப்பியம் இது. இக் காப்பியத்தின் இருவேறு களங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிக் கூறுகள் இரண்டு. அவை உள்ளுறை நிறைந்த சொற்றொடர் வழியே வளங்கொழித்தன; பொருளாழத்தொடு தனித் தனியே வேறு வேறு திறத்து ஓவியச் செய்திகளாக விளக்கமுற்றன.

அவற்றுள், காப்பியத் தொடக்கத்தின் ஒரு சூழலில், சிவந்த வாய்ச் சீதை நல்லாளைச் சூழ்ந்து தோற்றம் பெற்ற நிகழ்ச்சிக் குறிப்புக்கள் இரண்டு: நடுவிடத்தின் மற்றொரு சூழ்நிலையில் இன்னல் செய் இராவணனைத் தழுவி எழுந்த நிகழ்ச்சிக் குறிப்பு ஒன்று. அக்குறிப்புக்கள் சுவைக்கும் தகுதி நாட்டத்தில், தொடர் பழகு பெற்றுக் கருத்துக்கு இனித்துச் சுவை நல்கும் சிறப்பு வாய்த்தவை.

## 2

பூழிவெங்கானம் புகுதற்குறித்துக் கேகயர் தம் மடந்தைதந்த, ஏகு என்ற ஏவலை இராமன் ஏந்தினான். அவ்வனத்திடை உறைந்து ஏழிரண் டாண்டில் அவன் மீண்டு வரவிருந்தான் என்பது உறுதி, இப்பிரிதலைச் சீதைக்கு ஆறுதலளிக்கக் கலங்காதே எனச் சொல்ல நினைந்த வகையில் இராமன்,

"நீ வருந்தலை; நீங்குவன் யான்"
(அயோத்தியா. நகர்நீங்கு. 521)

என்று உரைத்தான்: அடுத்துக் காட்டிற்கு அவள் வருகை வேண்டா என்ற குறிப்பினையும் நயமாக இயம்பினான். அவ்வளவில், அம்மொழிகள் அவள் செவியில் தீய வெஞ்சொற்களாய்ப் பாய்ந்தன; பெருந்துயர்ப்படுத்தின. தொடர்ந்து அவள் உள்ளத்தே,

"இன்னாது இனியார்ப் பிரிவு" (குறள்: 1158)

என்னும் ஓர் எண்ணமும் எழுந்து நிரம்பித் ததும்பியது.

அங்ஙனம் துயரப்பட்டுக்கொண்டிருக்கும்போது, அக்கருங் குழலினாள்மாட்டு மட்டிலா அன்பினில் தான் வலியன் என்று விளம்ப விருப்புற்றான் அவன். எனவே, வெம்மையால் அவள் அடிகளைக் கேடுகொளச் செய்யும் அக்காட்டின் இயல்பை விளக்க.

"அல்ல ரக்கி னுருக்கழல் காட்டதர்க்
கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போது"
(நகர்நீங்கு. 227)

என்று தன் சொற்களை வெல்லுஞ் சொற்கள் வேறு இல்லை என்னும் தகுதியொடு இராமன் பல சொற்களை அடுக்கத் தொடங்கினான் இங்குக் கம்பர்,

"தந்நே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமு தேயென் றடிபோற்ற
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவி னைதுங்கிப் பொலிகின்றாள்"
(மிதிலைக் காட்சி. 30)

என்று கூறிய சீதையின் செல்வ வாழ்க்கை நன்னிலையையும் அறிதல் வேண்டும். கால்கள் மென்மையொடு விளங்க, அவளுக்கு இளமையில் இருந்த ஏற்ற சூழ்நிலை நலத்தினை இப்பாடல் அறிவிக்கும். அவள் நடந்து செல்லும் வழி மருங்கே கட்டழகு வாய்ந்த மங்கையர் பலர் நின்றனர்; அவள் அடியிட்டுச்செல்லும் பாங்கினைப் பாராட்டினர்; முறையே நடந்து, அவள் கால் வைத்து நடக்க நடக்க, வழிநெடுக முன்னே முன்னே மலர்களைத் தூவினர். இவ்வகையில், அவள் அடிகள் பூக்களிடையே நடந்து நடந்து, மென்மை வளர்த்து அமைந்திட வாய்த்த வாய்ப்பை மேலே சுட்டிய பாடல்வழி அறிந்துகொள்ளுதல் கூடும்.

அடுத்துச் செம்பஞ்சு ஊட்டிய அவள் சிவந்த மெல்லிய அடிகள், கற்களொடு கொதித்துச் சுடுங்காட்டின் கொடுமையைத் தாங்கும் வலிமை வாய்ந்தவை அல்ல ஆதலான், மனைவியின் துன்பத்திற்கு மிக மிக அஞ்சும் இயல்பான இரக்கமும் தனக்கு இல்லாமல் இல்லை என்ற குறிப்பையும் இராமன் மொழிந்தான்; அஃது அல்லாமல், அவள் காட்டிற்கு வாராது இருந்து நலமடைய வேண்டுமென்பதே தன் விருப்பம் என்ற குறிப்பையும் திறம்படக் கனிவுடன் எடுத்து இசைத்தான்.

எனினும், அவள் தன் கருத்தைக் கலக்கி வாட்டிய அக்கடுந் துயரை, அவன் மனத்தகத்தே பக்குவமாகப் பதியவைத்திடு மாறு வெளியீடு செய்து, மனத்தைக் கரைத்து மாற்ற முயன்ற வல்லமை ஈண்டறியத்தக்கது. சிறு பிரிவுக்கு அஞ்சும் பேரச்சத்தில் பிறந்து அலைத்த எண்ணத் திவலைகளின் மோதலைத் தாங்கிச் சுமந்த துன்பச் சுமையால்,

"நின்
பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு"
(நகர்நீங்கு. 228)

என்ற சொற்கள், இராமன் வாய்மொழிக்கு எதிராக அவள் வாயினின்றும் எழுந்தன. இங்கு, இராமன் முன்னர்ச் சுட்டிய, காடு சுடும் என்னும் உண்மையின் திறனறிந்து, அதனை மறுத்தலின்றி மதிப்பொடு தழுவி, அம்மெய்ம்மையினைக் காதல் அன்பினுல் சீர்தூக்கிக் காணுமாறு மாற்றித் திருத்தி, அவன் நெஞ்சம் வேட்பச் சொல்லிய சீதையின் சொல்வன்மை, ஒருவாறு அவன் மனத்தைக் கவர்ந்து வியப்பையே ஊட்டியது என்பது உண்மை. அடுத்து, இராமனுடு உடன்போக்கு வேண்டலே அவள் நினைவின் ஆழத்தில் நிலவிய விருப்பம் என்பதும் ஈண்டு விளக்கமுற்றது. சீதையின் மொழிகளில்,

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ" (குறள்: 1159)

என்ற திருக்குறளின் பொருள் வளமும் நுட்பமாக வளர்ந்து, நயமுண்டாக, மிகப் பெருத்தமுறப் பொங்கிவழிதல் இங்கு எண்ணத்தக்கது.

இக் காதல் நெறியில், திருவள்ளுவர் தெளிவுறுத்திய,
"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றுள் இவள்" (குறள்: 1104)

என்ற காதல் தலைவன் ஒருவன் எண்ணத்தொடு சீதையிடம் குடிகொண்டிருந்த காதல் எண்ணத்தை ஒப்பிடுதல் பல்லாற்றுனும் பொருந்தும்: நீங்கவே சுட்டு வருத்தி, நெருங்கவே குளிர்ந்து வருந்தாது நின்று புதுமையாகப் பூத்த தீ, எவ்விடத்திலிருந்து காதல் தலைவிக்கு எய்தலாயிற்று என்று அக் காதல் தலைவன் வியப்புற்றுன். அத்தீயைப் — பிரிவு விளைக்கும் வெம்மையைக் — கம்பராமாயணத் தலைமகள் சீதை, அணுகாது

தன்னை ஒதுக்கித் தனித்துப் பெயர்தலே, தொடின் உடன் சுட வல்ல செந்தீயாகும் என்று இராமனுக்கு அறிவித்த அழகு நோக்கத்தக்கது.

அப்பிரிதலை அவன் எண்ணுதல் ஆகாது என்பதே அவள் நோக்கம். இங்குத் காதல் இன்பச் சிறப்பினைப் பொறுத்தஅளவில், பிரிவின் வெம்மையை எண்ணிப் பார்க்கவே அது பனையளவாகப் பெருகியும், காட்டின் வெம்மையைக் கருதவே அது தினையளவாகக் குறைந்தும், அந்நிலையில் உண்மைக் காதல் உள்ளம் கொள்ளக்கிடத்தல் விளங்கும் என்று அவள் தன் கேள்வன் இராமனுக்குக் கூறிய திறம் தெளிவாகும். இவ்வழியில், கம்பர் காதல் மலிந்த அவள் நெஞ்சத்தை வெளிப்படுத்தி, மரபின் வளர்ச்சி வழி மாற்றத்து மாண்பாக மகன் ஒருவன் எண்ண வோட்டத்தை மகள் ஒருத்திக்குக் காட்டிய மதிநுட்பம் போற்றுந்தகையது.

இத்திறத்தில், சீதையை முன்வைத்துச் சேர்த்த குறிப்புக்களை, இராவணனை ஒட்டி எழுந்த குறிப்புக்களோடு இயைபு படுத்திக் காணுதல் வேண்டும்.

## 3

பெருந்தகு கற்பின் பெருமகள் சீதையைப் — பிறன் மனைவியைத் — தன் மனச்சிறையில் கரந்த காமத்தால், இராவணன் பேரிசை ஆண்மைக்குச் சிறுமை சேர்ந்தது. அவன், அக்கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் கற்பினளை நயந்த கயமை எண்ணத்தை மாற்றும் ஆற்றலின்றித் தடுமாற்றங்கொண்டான்; காமங் காழ்கொண்ட நெஞ்சமொடு அவளைக் கவரும் பொருட்டுச் சூழ்ச்சியை மேற்கொண்டான்.

இராவணனது கயமை நாட்டத்திற்குத் தக, மாரீசன் மயங்கிப் பொன்மயமான மானுருவங் கொண்டான்; இராமனும் இலக்குவனும் சீதையைத் தனித்துவிட்டு விலகுதற்கு இடமும் உண்டாக்கிக் கொடுந்தான் முதிர்ந்து எழுந்த எண்ணத்தைச் செயற்படுத்த உறுதி கொண்ட இராவணன் தன் காமநோய் கூர்ந்த வேட்கைக்கு முரண்தரும் முற்றத் துறந்த முதிய முனிவர் வடிவத்தினை வளைந்த மேனியொடு தகவிலாது தாங்கினன்; தன் நெஞ்சில் வஞ்சகம் பதுங்கிவிட, மாசில் புகழ்க் கற்பினள் சீதை இருந்த இலைக் குடிலை ( Leafy Hut )—பர்ணசாலையை—நண்ணுதற்குக் குறு குறு நடந்தான்: அவன் காமத்தியற்கை துள்ளும் தளர் நடையினைக் கம்பர்,

"பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலந்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறுங் காலன்"
(ஆரணிய. சடாயுவுயிர்நீத்த 22)

என்ற வகையால் வரைந்துள்ளார்.

இங்கு, இராவணன் அடியிட்டுச் செல்லும் பாங்கு, ஓவியக் காட்சியாக ஒளிர்வது. அக்காலே, அவளைக் கையகப்படுத்தும் அவாவொடு நாடுதற்குக் கொழுத்த காம எண்ணம் அவன் உள்ளத்தின் ஒரு பக்கம் ஓங்கி வளர்ந்து உந்தலாயிற்று; மறு பக்கம், இத்துணை நாளும் அவன் ஒழுக்கம் வீழாது நிலைக்க உயி ரளித்த பேராண்மை நல்லுணர்வு முளைவிட்டுக் கீழ்மையில் மயங்கி வீழ்தலைத் 'தகுதி செய்திலை' என்று இடிக்கலுற்றது. ஆதலான், அவ்விழுமியோளைப் பொங்கும் காம எண்ணத்தால் அடைய விழைந்த நிலையில், பூமலருங்காலத்து, இதழ்கள் ஓசையின்றிக் குறுகச் சிறிது சிறிதாக விரிதலை ஒப்ப, ஓசை எழாது மெல்லக் குறுகவே தளர்ந்து அடியிட்ட அவன் நடை உள்ளது என்று கம்பர் கருதலாயினர்.

இப்போது, சிறுமை செய்யத்தலைப்பட்ட அவன் வாழ்க் கையில் புகுந்த புதுமை, அச்சம் உண்டாக்கிக் கால்களுக்குத் தடுமாற்றத்தொடு நடுக்கத்தைக் கூட்டியது; அறங்கடந்து தீமை செய்யத் துணிந்த வஞ்சனை, நெருப்புத் துண்டுகள் சிதறிப் பரவித் தீயூட்டிய நிலமாகச் சுட்டுத் தயக்கம் ஊட்டிக் கால் களுக்குத் துடித்தலொடு துள்ளலையும் தந்தது. பெருங்கேடு உண்டாவது திண்ணம் என்று நினைத்தற்கு மாறாக, அவளை நாடிச் செல்லும் தீய நெறியினின்று, அப்போது தங்கிய உள் ளத்தையும் தாங்கிய உருவத்தையும் விடுதலை செய்து, நல்வழிப் படுத்தித் திருப்புதற்கு இயலாது, இடர்ப்பட்டுக் கொண்டது விடாது விடாப் பிடியாகத் தடுமாறும் அவன் மாசு படிந்த மனத்தின் இயல்பு இங்குக் குறிப்பாக விளங்கும். இறுதியாக முன்னைப் பகுதியில் சீதையை முன்வைத்துத் தொகுத்த குறிப் புக்களும், இப்பின்னைப் பகுப்பில் இராவணனை வளைத்துக் கொண்டு வெளிப்பட்ட குறிப்புக்களும் ஒருவகையில் பொருத்த முற்றுப் பொருளாழத்தொடு பொலிதலால் ஒன்றுபடுத்தி நோக்கத்தக்கன.

4

இங்குச் சுவை நோக்கில் சுவைத்தற்கு வேண்டுவது இரண்டு கூறுகளாகக் கிளைக்கும். அவள் இணையடிகள் மலர்போல்

மென்மை கொண்டவை என்பது ஒன்று. கடும் வன்மை கண்டது காடு என்பது மற்ருென்று. இக்கூறுகளைக்கொண்டு, இடர் இழைததற்குச் சீதையை நோக்கிய இராவணன் சூழ்ச்சிகளுக்கு நேராக நிரல்படுத்தி நிறுத்திச் சேர்த்து, அங்கு வெளிப்படும் உண்மைகளைத் தெளிதல் வேண்டும்.

இராமனுல் சேர்ந்த காதலைப் பேணிப் பாராட்டி நினைந்த பெண்மகள் சீதை, பூவின் தன்மை நெருங்கி மென்மை வாய்ந்த தன் கால்களைப் பெருங்காட்டின் வெம்மை, அத்துணை வன்மையொடு தாக்காது என்ற துணிவொடு அக்காட்டின் வெம்மையைக் குறைத்து மதிப்பிடும் தேறுதலையும் பெற்றுப் பீடுற்ருள் என்பது இங்கு விளங்கும் செய்திகளில் ஒன்று. மற்ருென்று, கற்பெனும் திண்மையில் திளைத்த சீதையால் வந்து குடிகொண்ட காமத்தைச் சிந்தித்த ஆண்மகன் இராவணனுக்கு வஞ்சனையால் பதிந்த அச்சம். பழிச்செயலுக்கு இணங்கி நடந்த கால்களுக்கு அக்காட்டின் அழலாய்த் தீமை இழைத்துத் துடித்துத் தளர்ந்து நடக்கமாட்டாது, குறுகவே ஓசையின்றி மலரும் பூவிதழ்களாக, நெருங்க அடியெடுத்து நடுக்கத்தொடு, நடக்கும் நடையைத் தந்தது என்பதாகும்.

இங்குச் சீதையின் காதற் பெருநலத்து வாக்கினிலும், இராவணனது தீராக் காமத்தியற்கை நடை நடுக்கத்திலும் பெருங்காட்டைப் பொருந்த நிறுத்தி, ஒப்புமை கோடல் நெறியில் விளக்கஞ் செய்தவாற்ருல், வெளிப்பட்ட கம்பர்தம் காப்பியத் திறன் செறிந்த பொருளாழத்தில் பொலிந்து பெருகும் இனிமை மாட்சிமை மிக்கதாகும் என்பது தெளிவாகும்.

---

( 356 ஆம் பக்கம் தொடர்ச்சி )

இவ்வாறே, முள் முருங்கை இலைமைப்பில் வேறுபட்டாலும் மரத்தின் நொய்ம்மையாலும் காய் அமைப்பொற்றுமையாலும் முருங்கையை ஒத்திருத்தலும், முற்போன்ற கிறு கனுக்களைக் கொண்டிருத்தலும் முள் முருங்கை எனப் பெயர் அமைப்பைக் கரணியமாய் இருந்தன.

இவ்வாறு, ஒவ்வொரு மரம் செடி கொடிகளின் பெயர்க் கரணியத்தையும் சற்றே எண்ணிப் பார்த்தல் பண்டைத் தமிழரின் இயற்கையோடு இயைந்த நுண்ணறிவு திறத்தைஅறிந்து மகிழ்தற்கும், இக்காலத் தமிழரின் போலிமைப் பகட்டை அறிந்து வருந்தற்கும் வாய்ப்புண்டு !

# கொடுக்காய்ப்புளியும் குறட்டைப்புளியும்

சு. பூங்காவனம், பி. ஏ.,
பெங்களூர்.

மதுரை, முகவை, திருநெல்வேலி மாவட்டங்களில் கொடுக்காய்ப்புளி என அழைக்கப்படுவது சில மாவட்டங்களில் குறட்டைப் புளி என வழங்கப் படுகின்றது. அவற்றுள் எது சரியான வடிவம் என்பதும் அதனுல் அறியப்படும் தமிழரின் நுண்ணறிவுத் திறனும் பற்றி இக்கட்டுரையிற் காணலாம்.

'கொடு,' 'குறட்டை,' சொற்பொருள்

(1) உல் > குல்.

'குல்' என்னும் வேரினின்றும் வளைவுக் கருத்தையுடைய பல சொற்கள் தோன்றியுள்ளன. எடுத்துக் காட்டாக கொடு, கொள், கொக்கி, கோளம், கோலி, கோணல், கோட்டை, குள்ளம், குடம், குடில், குணுக்கு, கூன் எனப்பல.

கொடு — கோடு
(எ—டு) "கணைகொடிது யாழ்கோடு" (குறள் 279)

'குறட்டை' என்ருலும் வளைந்தது என்றும் குறுகியது என்றும் பொருள்படும், குறள், குறளன் என்னும் வடிவங்களை நோக்குக. இனி,

குல் > குர் — குருவி = பறவை இனத்தில் சிறியது.
குர் — கூர்மை — (நுண்மைப் பொருள்)
குர் — குறு — (குறுமைப் பொருள்)
குர் — கொறு. கொடுக்காய்ப் புளிக்குக் கொறுக்காய்ப் புளி என்றும் ஒரு பெயர் உண்டு.

புளியும், கொடுக்காய்ப்புளியும்

மர இனத்தில் புளிய மரத்தினை அனைவரும் அறிவர். சுவைப் புளி தருவது; சிறிய இலைகளையும், வன்மையான கொம்புகளையும் உடையது. புளியங் கொம்பின் வலிமையால்

---

1. பாவாணரின் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்.

"பிடித்தாலும் புளியங் கொம்பு" என்னும் பழமொழியும் ஏற்படலாயிற்று. (2)

புளிய இலையினைப் போன்றதும், ஆயின் சற்றே பெரிய இலையினையுடையதும், புளியங் கொம்பினும் சற்றே வலிமை குறைந்ததும், புளியங்காய் போன்றே தோலும், சதையும், விரையும் அடுக்கடுக்காகக் கொண்ட அமைப்பினையுடைய காய்களையுடையதும் ஆகிய ஒரு மரமே கொடுக்காய்ப்புளி எனப் படுவது. புளியமரம் போலப் படர்ந்து நெடுக வளர்வதாயினும், இக் கொடுக்காய்ப்புளி முள்ளினை யுடையதால் புளியினின்றும் வேறுபடுவது.

பெயர்ப் பொருத்தம்; இலையும் பூவும் பிஞ்சும் காயும் கனியும் புளிச் சுவையுடையதனுல் அவற்றையுடைய மரத்தைப் புளிய மரம் என்று பெயரிட்டனர். அதன் உருவ அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கும் மற்ருெரு மரத்தைக் கொடுக்காய்ப்புளி என்று பெயரிட்டனர். புளிய மரத்திற்கும் கொடுக்காய்ப்புளி மரத்திற்கும் வேறுபாடு என்னையோவெனின் புளியமரம்போல் இலைமுதல் கனிவரை புளிச்சுவை தருதல் கொடுக்காய்ப்புளிக்கு இல்லை. மேலும் புளியங் கொம்புபோல வன்மையின்மையும், முள்ளினையுடைத்தாயிருத்தலும் புளிய மரத்தளவு ஓங்கிப் படர்ந்து வளராமை, காயும் கனியும் துவர்ப்பு அல்லது இனிப் புச் சுவையுடைமையும் கொடுக்காய்ப்புளியின் தன்மைகளாம். இவ்வாறு ( புளிச் ) சுவையிலே வேறுபாடுடையதாக இருக்க, ( கொடுக்காய்) புளி என்று கூறுதல் பொருந்துமோ வெனிற் கூறுதும்.

இருமரமும் படர்ந்தவுடனே ஒன்றுபோலத் தோன்றுவன. பார்ப்பவர் உருவப் பொது அமைப்பினைக் கண்டவுடன் இரண் டும் ஒன்றென மயங்குதல் கூடும். ஆயின், பார்ப்போர்க்கு அம்மரத்தில் காய்கனி உண்டோவென நோக்குதல் இயற்கை. அதனுல் காயைப் பார்த்தவுடன் கொடுக்காய்ப்புளியின் காய் சுருண்டும் வளைந்தும் உள்ளமையும், புளியங்காய் அவ்வாறு மிக வளைந்து இல்லாமையும் வேறுபாடு அறிந்து கொள்ளும் படியுள்ளது. அதனுல் இருமரத்திற்கும் ஒப்பீடு காரணியமாகப் பெயர் அமைந்தது என்க.

---

2. சுவைப் புளியின் முழுப் பயனை அறிய விரும்புவார், ஆ. இரா. கண்ணப்பனுர் எழுதிய நம் நாட்டு மூலிகைகள் நான்காம் மடலத்திற் காண்க.

'குறட்டைப் புளி' என்பதன் தவறும், தமிழரின் நுண்ணுணர்வும்.

கொடுக்காய்ப்புளி என்னுமல் குறட்டைப் புளி என்பதனல் நேரும் தவறு என்னவென்று காண்போம். அதற்கு அவ்விரு பெயரையும் விரித்தாலே போதுமானது.

கொடுக்காய்ப் புளியமரம் என்ருல் வளைந்த காயையுடைய புளிபோன்ற மரம் என்ற பொருளைத்தரும். குறட்டைப் புளிய மரம் என்பதை விரித்தால் வளைந்த புளிபோன்ற மரம் அல்லது வளைந்த புளியையுடைய மரம் எனப் பொருள் கொள்ள நேரிடும்.

வளைந்த புளிபோன்ற மரம் எனப் பொருள் விரித்தால் இயைந்த பொருள் தாராது. வளைந்த புளியையுடைய மரம் என்று கூறின் வளைந்த (சுவை) புளியைக் கொண்டுள்ள மரம் என்று பொருள்தந்து கொடுக்காய்ப் புளியைக் குறிக்காமல், குறட்டையான (சுவைப்) புளியையுடைய மரத்தையே குறித்தலி ஞல் பொருண் மயக்கம் விளைதல் காண்க வளைந்ததும், நீண்ட துமான புளியம் பழத்தைக் குறட்டைப் பழம் என்று கூறும் வழக் கத்தையும் காண்க. கொடுக்காய்ப்புளி என்னும் தொடரில் இடை நின்ற காய் என்னும் சொல் ஒப்பீட்டுப் பொருள் வேறுபாடு மட்டும் (மரத்திற்காதலால்) உணர்ச்சி, அதனுடைய காயை உணர்த்துதற்கு இறுதியில் இன்னும் ஒரு காயைச் சேர்த்து 'கொடுக்காய்ப் புளியங்காய்' என,

"புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை" (தொல்—எழுத்து—உசரு) இலக்கணத்திற்குட்பட்டு வருதல் காண்க.

இதனல் கொடுக்காய்ப்புளி என்பதன் பொருட் சிறப்பையும் குறட்டைப்புளி என்பதன் பொருண் மயக்கத்தையும் உணரலா மன்ரே! உணரவே, தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வையும் நுண்ணறிவுத் திறத்தையும் அறியலாமன்ரே! தமிழர் தம் நுண்ணறிவிற்கும், இயற்கையோ டியைந்த வாழ் விற்கும் இன்னும் ஓரிரண்டு எடுத்துக் காட்டுடன் இக்கட்டு ரையை முடிப்போம்.

யான் ஓடியாடித் திரியும் இளந்தைப் பருவத்தே எமது கொல்லையில் இருந்த பூவரசு மரம் எனது ஆட்டத்திற்கு உற்ற தோழனய் இருந்தது. அதுபோது பூவரசு' என்று ஏன் பெய ரிடவேண்டும் என்ற வினு உள்ளத் தெழுந்தது அவ்வின வைப் பிறரிடம் வெளியிட்டபோது பூக்களுக்கெல்லாம் இதனு டைய பூ அரசு போன்றது என்று கூறி மழுப்பி விட்டனர்,

பின்னும் சிலயாண்டு கழிந்து பள்ளியிற் பயிலுங்கால் ‘ தாமரை ’ (Lotus) என்ற ஆங்கிலப் பாடலைப் படிக்க நேர்ந்து. அதனை விளக்கிய ஆசிரியர் “ மலர்களைப் பெண்மையாகக் குறிப்பர் ; தாமரை மற்ற மலர்கட்கெல்லாம் அரசி ” என்று விளக்கிப் போந்தார். என் சிற்றிளமைப் பருவத்தே அடக்கப்பட்ட உணர்வு கிளர்ந்தெழுந்தது. பூக்களைப் பெண்மையிற் கூறுவார்களாமே ; பூக்களுக்கு அரசி தாமரையாமே ; அவ்வாறிருக்க பூக்களுக்கு அரசு பூவரசு என்பதும் பூவரசி என்று கூருது பூவரசு என்பதும் தவறன்ரே என்ற ஐயம் எழுந்தது. அவ்வையத்தை எழுப்பின் பிறர் நகையாடுவரோ என நினைந்து அடங்கியிருந்து விட்டேன்.

பின்னர், யானும் எனது நண்பர் ஒருவரும் வயலூடு காலாற நடக்கச் சென்றபோது ஒரு பூவரசு மரத்தையும் சில அரச மரங்களையும் காண நேர்ந்தது. முன்னர் என் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த ஐயம் பூவரசு மரத்தைக் கண்டவுடன் தலை தூக்கத் தொடங்கியது. நண்பரையும் அழைத்துக்கொண்டு அம் மரங்கட்கருகிற் சென்றபோது பூவரசு என்னும் பெயர்க் காரணியம் தெரியலாயிற்று.

ஆல், அரசு, அத்தி, எல்லாம் ஓரினம். பூவரசுக்கும் ஒருசார் ஒற்றுமை நோக்கி ‘அப் பெயர் அமைந்தது. பூவரசின் இலை அரசிலை போன்ற ஒருசார் உருவமைப்புடையது. அரசமரம் போலப் பூவரசும் (ஓரளவு) ஓங்கி வளரும் தன்மைத்து. அரச மரத்தின் கொம்புக் கணுக்களில் பிஞ்சும் காயும் கண்ணுற்ற போது எல்லாம் வெட்ட வெளிச்சமாயிற்று. ஆல், அரசு, அத்தி முதலியன பூவின்றிக் கொம்புகளில் காய்ப்பவை. நடக்காத செயல் ஒன்றை ‘ அத்திப் பூப்போல் ’ என்று கூறுவதும் காண்க. பூவரசும் அத்தி அரசு போன்ற (ஒருசார்) உருவமைப்புடையதாய் இருப்பினும். இளஞ் சிவப்பும் மஞ்சளுமான பூக்களைக் கொண்டது. இதனல் பூவை உடைய அரசு என்ற பெயர்க் காரணம் இனிதே விளங்கிற்து. பூவரசின் காய் அமைப்பும் உருவமும் அத்தி, ஆல், காய்களை ஒத்திருப்பது பெயர்க்காரணத்தை உறுதிப்படுத்தியது. பூவரசுப் பெயர்க் காரணியம் தெரிந்ததால் எனக்கு ஏற்பட்ட மகிழ்வினைக் கண்ட நண்பர் என்னவென்று ஆவலுடன் வினவினர். பூவரசின் பெயர்ப் பொருத்தத்தைக் கூறியவுடன் அவரும் மகிழ்ந்தார். ஆயினும் இதற்கு இவ்வளவு மகிழ்ச்சியா என்ற வினக்குறிப்பும் அவர் முகத்தில் எழுந்தது. எனது நெடு நாளைய ஐயத்தை நண்பர் அறிந்திருக்க வழியில்லையன்ரே !

# இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்.

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 33-ஆம் ஆண்டு விழா திருவள்ளுவராண்டு 2003 மாசித் திங்கள் 22-ஆம் நாள் (24—2—72) வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெரு மன்றத்தில் கல்லூரி முதல்வர், பேராசிரியர் ஜெ. ஆர். ஜெயச்சந்திரன், எம். ஏ. (வரலாறு). எம். ஏ. (தமிழ்): டி. பி. ஈ. டி. தலைமையில் நிகழ்ந்தது. செல்வி த. ரெ. வனஜா வந்திருந்தோரை வரவேற்றார். தலைவர் தம் முன்னுரையில் இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் ஆற்றியுள்ள பணிகள் பற்றிக் குறிப்பிட்டார். நன்கு படித்து கல்லூரியில் வழங்கப்பெறும் பரிசுகளைப் பெற ஒவ்வொருவரும் முயலவேண்டும் என மாணவ மாணவிகளைக் கேட்டுக் கொண்டார். ஆண்டு நிறைவு விழா உரை நிகழ்த்திய திருச்சி, புனித சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ, 'இலக்கியம் எதற்கு' என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர், இலக்கியம் படிப்பதற்கும் கேட்பதற்கும் மட்டுமன்றி வாழ்க்கையில் கொண்டு ஒழுகுதற்கும் உரியது எனக் குறிப்பிட்டு தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கேற்ப வாழ்ந்ததை எடுத்துரைத்தார். தலைவர் முடிவுரைக்குப்பின் பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் பரிசுகளை வழங்கினர். நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் பரிசு 1970-ஆம் ஆண்டிற்கு திரு. ப. நவநீதனுக்கும், 1971-ஆம் ஆண்டிற்கு, செல்வி. இரா. ஜெயலட்சுமிக்கும் வழங்கப் பெற்றது. அம்மாபேட்டை திருமதி தருமலிங்கம் பிள்ளை செங்கம்மாள் ஆச்சி அவர்கள் நினைவுப் பரிசு 1970-ஆம் ஆண்டிற்கு, செல்வி கா. சிகாமணிக்கும், 1971-ஆம் ஆண்டிற்கு. செல்வி இரா. ஜெயலட்சுமிக்கும் வழங்கப்பெற்றது. இவ்வாண்டு இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் நடத்திய பேச்சுப் போட்டி, இசைப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றோருக்கும் பரிசுகள் வழங்கப்பெற்றன. இரா. பூமி நன்றி கூறினர். செல்வியர் பூங்கோதை, லட்சுமிகாந்தம் சங்க வாழ்த்தும் நாட்டு வாழ்த்தும் பாட கூட்டம் இனிது முடிந்தது.

# தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

( 11 )

சென்ற இதழ்களின் தொடர்ச்சியாகப் பதிவாளர் அலுவலகங்களில் பொது மக்கள் பயன்படுத்த நேரும் சில பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. இவற்றைப் பயில்வார் பயன்படுத்துவாராக. எவையேனும் சில சொற்களுக்குத் திருத்தங்கள் ஏற்றதெனக்கருதினல் வழக்கம்போல் அன்பர்கள் அவைகளை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| பத்திரம் | — | ஆவணம் |
| சுத்த கிரய சாசனம் | — | தனி விலை ஆவணம் |
| ஒத்தி | — | ஒற்றி |
| பெந்தகப் பத்திரம் | — | அடைமான ஆவணம் |
| செட்டில்மெண்ட் பத்திரம் | — | ஏற்பாடு ஆவணம் |
| பாகப் பத்திரம் | — | பிரிவு ஆவணம் |
| பரிவர்த்தனை, Exchange | — | பரிமாற்ற ஆவணம் |
| உயில் | — | இறுதி முறி, விருப்ப ஆவணம் |
| பிராமிசரி நோட் | — | உறுதிமுறி |
| ரொக்கம் | — | பணம் |
| கிரயம் | — | விலை |
| நிச்சயித்து | — | உறுதி செய்து |
| மொத்தம் | — | கூடுதல் |
| சாசன வாசகப்படி | — | ஆவண மொழிப்படி |
| அனுபவித்துக் கொள்வது | — | ஆண்டு கொள்வது |
| சுவாதீனத்தில் | — | பொறுப்பில் |
| ரெஜிஸ்தர் செய்துள்ளது | — | பதிவு செய்துள்ளது |
| சர்க்கார் கிஸ்தி | — | (அரசு) நிலவரி |
| வாபஸ் | — | மீட்டுப்பெறல் திரும்பப்பெறல் |
| சாமீன் | — | பொறுப்பு |
| வில்லங்கம் | — | தொடக்கு |
| நஷ்டம் | — | இழப்பு |
| வாரிசுகள் | | மரபு உரிமையர், மரபு உரிமையாளர் |
| மிராசு | — | நிலக்கிழமை |
| தஸ்தாவேஜ் | — | ஆவணம் |
| ரத்து | — | முறிவு, விலக்கு, நிறுத்தம் |
| சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்துவரும் | | எல்லா உரிமையுடன் ஆண்டு வரும் |
| தானுதி வினிமய விக்ரயங்களுக்கு யோக்யமாய் | | அறம் முதலானவற்றுக்குப் பங்கீடு செய்யவும், விற்கவும் தகுதியாய் |
| புத்திர பௌத்ர பாரம்பரியமாய் | | மரபு வழியாக, மகன் பெயரன் வழி வழியாக |

தமிழ் வாழ்க.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம் - தஞ்சை

# மணி விழா - விண்ணப்பம்

அன்பார்ந்த ஐயன்மீர்,

நமது கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றி அறுபதாண்டுகள் நிறைவை 1971 மே திங்களில் எய்தி விருப்பது தமிழன்பர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருவ தொன்றாகும். எனவே சங்கத்தின் மணிவிழாவைக் கொண்டாட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். தமிழவேள், திரு. த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் சங்கத்தைத் தோற்றுவித்தது முதல் முப்பதாண்டுகள் அதன் தலைவராகத் திகழ்ந்து செய்த தன்னலமற்ற தொண்டால் சங்கம் மேலும் மேலும் வளர்ந்தது. புறக்கணிக்கப்பெற்ற தமிழ், புத்துயிர்பெற்று வீறுகொண்டு எழுந்தது. இன்று தமிழ் மொழியின் செம்மையையும் சிறப்பினையும் பல நாடுகளிலுமுள்ள அறிஞர்களெல்லாம் போற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளதென்றால், அதற்குத் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலர் செய்த தொண்டுகளும், தமிழின் தனி நிலையைப் பாதுகாக்கும் பணியை முதற் கடமையாகக் கொண்ட சங்கமாக முதன் முதல் தோன்றிய நமது கரந்தைத் தமிழ்ச் சங்கம் இந்த நூற்றாண்டின் முதற் பகுதியில் செய்து வந்த ஆக்கப் பணிகளுந்தான் காரணமாகும்.

நமது சங்கம் 1916-ஆம் ஆண்டில் ஒரு தொடக்கப் பள்ளியை நிறுவி நடத்திவருகிறது. 1938-ஆம் ஆண்டு நிகழ்ந்த வெள்ளி விழாவின் போது திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் திறந்துவைக்கப்பெற்ற கரந்தைப் புலவர் கல்லூரி வளர்ந்து இன்று 209 மாணவர்களுடன் நடைபெற்று வருகிறது. 1944-ஆம் ஆண்டில் தமிழவேள் பெயரால் நிறுவப்பெற்ற உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி இன்று முன்னேற்றம் பெற்று 1050 மாணவர்களுடன் நடந்து

வருகிறது. நூல் நிலையமொன்று 10300 நூல்களுடன் பாதுகாக்கப்பெற்று வருகிறது. திக்கற்ற பிள்ளைகள் ஐம்பதின்மருக்கு உண்டியும் உறையுளும் தந்து கல்வியுடன் ஒழுக்கத்தையும் பயிற்றுவிக்க ஒரு திக்கற்ற மாணவர் இல்லத்தை நடத்தி வருகிறது. தமிழ் மொழி நலங்கருதி 'தமிழ்ப் பொழில்' என்னும் சிறந்த இலக்கியத் திங்களிதழை நாற்பத்து நான்காண்டுகளாக நமது சங்கம் வெளியிட்டு வருகிறது.

நமது சங்கத்தின் மணிவிழாவை மூன்று நாட்களில் முத்தமிழ் விழாவாக ஏற்ற சிறப்புடன் நடத்த எண்ணியுள்ளோம். தமிழவேள், **திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின்** தொண்டுகளும் பண்புகளும் தமிழ்மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கவும் அவர்பால் நமக்குள்ள அன்பையும் நன்றியையும் எடுத்துக் காட்டவும் அவர்களுடைய உருவச்சிலை யொன்றைச் சங்கக் கட்டடங்களின் நடுவில் ஏற்ற இடத்தில் அமைக்கக்கருதி யுள்ளோம். சிலை எழுப்பப் பதினாயிரம் வெண்பொற் காசுகள் ஆகுமென மதிப்பிடப் பெற்றுள்ளது. மணி விழாவைச் சிறப்புற நடத்த மேலும் சில ஆயிரம் வெண் பொற்காசுகள் வேண்டும். தமிழன்பர்கள் அனைவரும் அன்பு கூர்ந்து தங்களாலான உதவியைச் செய்தருள வேண்டுகிறோம்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

—குறள்

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்

—பாரதியார்

கருந்திட்டைக்குடி
15—8—'72

இங்ஙனம்
**கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.**

---

அஞ்சல் வழி நிதி அனுப்புவோர் :

**பொருளாளர்,**

**கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் - 2**

என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.